In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.14 |
| Name: Ilayaraja | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 01-04-2025.

**(Accused absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் கொடைரோடு அருகே உள்ள மாவூத்தன்பட்டியில் வசிக்கிறேன். நான் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக ராம்குமாரிடம் செண்பகராஜா என்பவர் வேலை பார்த்து வந்தார். இரவு 1 மணியிருக்கும், நான் பைபாஸ் ரோட்டில் உள்ள சுபாஷ் ஓட்டலில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ராம்குமாருக்கும் செண்பகராஜாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு நடந்தது. அப்போது ராம்குமார் அருகில் இருந்த க்ளப்பில் இருந்து கத்தியை எடுத்து செண்பகராஜாவின் இடது பக்க இடுப்பில் கத்தியால் குத்திவிட்டார். அப்போது ராம்குமாரின் நண்பர் செந்தில் பீர் பாட்டிலை எடுத்து செண்பகராஜாவின் தலையில் அடித்துவிட்டார். நான் உடனே ஓடிவந்து அவரை தூக்கி பார்த்தேன். அவர் நன்றாக பேசினார். உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு ஆம்புலன்ஸ் வந்தபிறகு ஏற்றி மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றோம். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி செண்பகராஜான் இறந்துவிட்டார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

சம்பவத்தின்போது நான் சம்பவ இடத்திலிருந்து 100 அடி தூரத்தில் இருந்தேன். நான்குவழிச்சாலையில் நிறைய வாகனங்கள் போய் வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. அதன் பின்பு காவல்நிலையத்திற்கு அழைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும், இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.04.01 15:00:44 +0530

Principal District Judge,
Dindigul.